செ.கு. எண்: 133

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 5.4.2012

கோயம்புத்தூர் மாவட்ட ஆயுதப்படைப் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. D.எபினேசர் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3.4.2012 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

உதவி ஆய்வாளர் எபினேசர் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான உதவி ஆய்வாளர் திரு. எபினேசர் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்